[30th March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜில்லாவை பொறுத்தமட்டில் அம்மாதிரி வேலை நடக்கும். மற்ற ஜில்லாக்களின் சமாசாரம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பருவ மழை தவறிய மற்ற ஜில்லாக்களிலும்........

MR. SPEAKER : இந்தக் கேள்வி திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. கனம் அங்கத்தினர் பெரியண்ணனுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும் பொருந்தும். ஆகையால் இந்தக் கேள்வியில் தாங்கள் எப்படி மற்ற ஜில்லாக்களைப் பற்றி கேட்கலாம் ? அதுபற்றி தாங்கள் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

Supply of water to Tholudur Project

* *S.N. Q.* 24.—SRI M. SELVARAJ : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation through Thiru M. Selvaraj, M.L.A., from the public of Tholar, Peenadam and Aviyangudi villages of Vridachalam taluk, about the utilisation of the surplus waters of Mettur Reservoir to Tholudur Project and to Emanari; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of utilising the waters of Mettur Reservoir was carefully examined and it was found not feasible.

SRI M. SELVARAJ : விருத்தாசலம் தாலூகா தொழுதூர் ப்ராஜக்டுக்கும், எமனேரிக்கும் 26,000 ஏகருக்கு பாசன வசதி தேவையிருந்தும், 17,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி செய்ய முடியவில்லை. மேட்டூர் அணையிலிருந்து சேலம் ஜில்லா நாமக்கல், லட்சுபாளையம் வழியாக உபரி தண்ணீரை இங்கே திருப்பிவிட்டு சௌகரியம் செய்வதுப்பற்றி "ரி-இன்வெஸ்டிகேட்" செய்வதற்கு "சூபரின்டெண்டிங் என்ஜினியர்" தலைமையில் ஒரு தனி டிவிஷன் நியமிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இதுபற்றி சீப் என்ஜினியர் பரிசீலனை செய்து, முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஒரு ப்ராஜக்டிலிருந்து தண்ணீரை இன்னொரு ப்ராஜக்டுக்குக் கொண்டு வருவது என்றால் அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. ரொம்ப தூரம் வரவேண்டியிருக்கும். தவிரவும் மைசூர் கவர்ன்மெண்டுக்கும் இந்த கவர்ன்மெண்டுக்கும் உள்ள எக்ரிமெண்டுபடி நடக்க வேண்டியிருக்கும். ஆகவே, இம்மாதிரி அங்கிருந்து தண்ணீர் கொண்டு வருவது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI R. SRINIVASA IYER : தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தேவையானதற்குமேல் உபரி ஜலம் மேட்டூர் அணைக்குக் கீழே வழிந்தோடுகிறதா ? உபரி ஜலம் ஏதாவது இருக்கிறதா என்பதை சர்க்கார் கண்டு பிடித்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளம் ஜாஸ்தியாக வரும்போது தான் உபரி ஜலம் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

Wenlock Downs Advisory Committee

* 1058 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the functioning of the Wenlock Downs Advisory Committee in Ootacamund?